1992 மார்ச் 25]

எனக்கு நேரிடையாகத் தெரியும், இவர் கூறுவது உண்மை, இவருக்கு ஏற்கனவே கார்டு இல்லை என்ற உறுதிமொழி தந்தால் எந்தவிதமான பரிசீலனையும் இல்லாமல், உடனடியாக அவர் களுக்கு கார்டுகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). மற்றபடி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 351, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

351—

தொழிற்கல்வி படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு.

* 5277 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டங்களிலுள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தொழிற் கல்வி படித்து பதிவு செய்துள்ள வேலையற்றோர் வேலை வாய்ப்பு பெற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மூடிய தொழிற்சாலைகள் திறக்கப்பட வேண்டும், நலிவுற்ற தொழிலாளர்கள் வாழ்வு நலம் பெற வேண்டும் என்று எண்ணி, சிந்தித்து செயல்படுகிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, தமிழகத்திலே தொழிற் சாலைகளே இல்லாத மாவட்டம் என்று எந்த மாவட்டமும் இல்லை. எனினும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தொழிற் கல்வி படித்து, பதிவு செய்து உள்ளவர்களுக்கு, மாவட் டத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு பெறவும், மற்றும் மாவட்ட தொழில் மையங்கள் மூலம் சுய தொழில் வழங்கவும் வாய்ப்புகள் உள்ளன. மேலும், அந்த மாவட்டத்திலே வேலை வாய்ப்புக்கு உரிய அழைப்புகள் இல்லாத நிலையில், அடுத்த மாவட்டத்திலிருந்து அழைப்புகள் வந்தால், அவர்கள் வேலை வாய்ப்பு பெற, பதிவு மூப்பு மற்றும் விதிமுறை களின்படி, பரிந்துரை செய்யப்படுகிறது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சில மாவட்டங்களில் தொழிற்சாலைகளே இல்லை. தொழிற்சாலை இல்லாத மாவட்டம் இல்லை என்று

சொன்னார்கள். ஆனால், என்னுடைய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. என்னுடைய மாவட்டத்திலே தொழிற் கல்வி படித்து, வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்தவர்களுக்கு வேறு மாவட்டங்களில், அதாவது தொழிற்சாலை உள்ள மாவட்டத்தில் வேலை வாய்ப்பு கிடைக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் கூட, செய்யாறிலே மாடர்ன் ரைஸ் மில் போன்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதே போல், போளூரிலும் இருக்கின்றது. எனினும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அவர்களுக்கு எப்போது வேலைவாய்ப்புக்கு உரிய அழைப்புகள் வந்தாலும், அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உரிய பரிந்துரையை மட்டும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செய்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: பேரவைத் தலைவர் அவர்களே, பிரிக்கப்பட்ட மாவட்டமாகிய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் விரல்விட்டு எண்ணும் அளவுக்குத்தான் தொழிற்சாலைகள் இருக்கின்றன. தொழில் கல்வி பயின்றவர்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களின் வேலை வாய்ப்புக்கு என்று மாநிலம் தழுவிய ஒரு பதிவு மையத்தை தலைநகராக உள்ள சென்னையில் அமைத்து, அங்கே பதிவு செய்தவர்களுக்கு பிரியாரிட்டி அடிப்படையில் வேலை கிடைக்க, பொன்மனச் செம்மலின் மறு பதிப்பான எங்களுடைய தங்கத் தலைவியின் ஆட்சியிலே அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் பட்டதாரிகள் சென்னையிலே பதிந்து கொள்வதற்கான வசதிகள் உள்ளன. மற்ற பட்டயத் தொழில் நுட்பத்தில் படித்து இருப்பவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலே அவர்கள் பதிந்து கொள்வதற்கு இப்போது வசதிகள் இருக்கின்றன. மேலும், சென்னை, மதுரை, கோவை போன்ற இடங்களிலே தொழில் கல்வி படித்தவர்கள் பதிவதற்கான வசதிகள் இருக்கின்றன. எனினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை. மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 352. திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.